ஓம்.

பரப்ரம்மணேநமஃ.

மகாபாசுபதாஸ்திர பராவர்த்தனப் பிரயோகம்

என்னும்

வைதிகசந்திரமௌலி.

இது

யாழ்ப்பாணம் ம-ா-ா-ஸ்ரீ செந்திநாதையரவர்களால் வரையப்பட்ட

மகாபாசுபதாஸ்திரம் என்னும்

விஷயத்திற்கு மறுப்பாகச்

சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரும்,

பாரமேசுவரோபநிஷன்மார்க்கப் பிரவர்த்தகரும்,

ஸ்ரீமன் மகாமகோபாத்தியாய

ஸ்ரீதியாகராஜ மகிபுங்கவர் சிஷ்யருமான

பரசமய பஞ்சானன பாஞ்சசன்னிய பண்டித

ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்களது

சிஷ்யர்களு ளொருவரான

ப்ரம்மஸ்ரீ நாகலிங்கசிவனவர்களால்

சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திரிகையில் வரையப்பட்டது.

(முதற்பாகம்.)

சென்னை:

மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

1899௵ மார்ச்சு௴.

விளம்பி௵ பங்குனி௴

இதன் விலை ரூபா 2.

ஓம்.

பரப்ரம்மணேநமஃ.

மகாபாசுபதாஸ்திரபராவர்த்தன பிரயோஹமென்னும்வைதிகசந்திரமௌலி.

நிகழும் துன்முகிஞு மார்கழிமீ ௨௨வ வெளிவந் துலாவிய விஜயத்துவஜ பத்திரிகையில் "மகாபாசுபதாஸ்திரம்" எனப் பெரும் பெயர் சுமந்த வோர் விஷயம் வெளியாயிற்று. இவ்விஷயத்தை யாராய்ந்துழி, கண்ணன் அவதரித் தருளிய காலத்து, அவர் திருமேனியினழகையும், அவரது திருப்புகழையுங் கேட்டு, அவரடியிணைகளில் பேரன்புற்று, அவர் திருமேனிச் சம்பந்தமான பெருவாழ்வைப் பெறவிரும்பி யகில லோக மாதாவாகிய ஸ்ரீஉமாதேவியார் வழிபாட்டை யுண்மையுள்ளத்துடன் செய்துவரும் ருக்குமணிப் பிராட்டியாரது திருமேனியில் எக்கியத்தின்கண் அமைந்த புரோடாசத்தினை யாவலுற்ற புலையன்போல் புருடோத்தமன் திருவேட மணிந்து பொய்க்கைகள் நான்குடன் வெளிவந்துலாவிய புண்டரகனது கதை யெமது ஞாபகத்திற்கு வந்தது.

பாசுபத மென்னுஞ் சொல், வைதிகர்கட்கும் அவைதிகர் கட்கும் பொதுச் சொல்லாய் அமைந்ததுபோல், அந்தோ! இப் பாசுபதாஸ்திர மென்னும் சொல்லும், இக்காலத்திற் கேற்றவாறு வடமொழிச் சொற்கமைந்த தௌர்பாக்கியத்தின் பயனுய் விபரீதப் பொருள் பெற்று நின்றதைப் பற்றி விசனிக்கின்ருேம்!

அக்கினி, சோமன், திருமால் என முத்தேவர் மயமாய் அமைந்து முழுமுதற் கடவுளான முக்கட்பிரான் கரகமல பார்சன தீட்சை பெற்றுள்ள ஸ்ரீபாசுபதாஸ்திர மெங்கே? சடையிற் செய்துள்ள நாட்டுப்புறத்துக் கோதண்டம் போன்ற இம் மகா பாசுபதாஸ்திர மெங்கே?

இனி அடியிற்கண்ட விஷயமான அதன் பொருளுக்கேற்றவாறு அம் 'மகாபாசுபதாஸ்திரம்' என்னும் சொல்லைப் பண்புத்தொகை யாக்காது, வேற்றுமைத் தொகையாய்க் கொண்டு, 'மகாபாசுபதர்' எனத் தற்காலத்திற் ருேன்றிய அவைதிகர்களை நோக்கித் திருப்பிவிடப்பட்ட அஸ்திரமெனப் பொருள் படுத்தி, அவர்செய்த மகாபாசுபதப் பிரயோகத்திற்குப் பிரதிக்கிரியாப்பிரயோகத்தைச் செய்துவருவாம்.

பஸ்மாசுரன், சலந்திரன் முதலிய அவைதிக பாசுபதர்கள், தம் தவப்பயனுகத் தமக்கமைந்ததோர் அஸ்திரங்களுக்குத் தாமே இலக்காய் நின்றவாறுபோல், இக்கடிதரும் ஆகின்ருர் என்பதற்கு அவர் விதியையே கடிந்து கொள்ளவேண்டுமன்றி, வேறு யாம் யாது செய்வோம்!

சைவசித்தாந்த உத்தாரக சிகாமணியான ஸ்ரீஅப்பய தீட்சித யோகி புங்கவர், ஸ்ரீகண்டமுனிவ ரியற்றிய பாஷியத்தின் உரையாய சிவார்க்கமணி தீபிகையில்

"மகா பாசுபதஞ்ஞான சம்ப்ரதாயபிரவர்த்தகாந்
அம்சாவதாரா நீஸஸ்ஸியயோகாசாரியாந்உபாஸ்மஹே"

என்று வைதிக பாசுபத சிகாமணிகளைக் குறித்தெடுத்திருக்க அதற்கு மாருய் இக்கடிதத்தைக் கைக்கொண்ட அவைதிக பாசுபதர், அச்சொல்லைத் தம்மினத்தார்க்கு உபயோகித்தது எப்பிரமாணத்தாலோ அறியோம்.

ஸ்ரீமத் தீட்சிதேந்திர சுவாமிகள் பிரயோகத்தினும் மேலான பிரமாணமொன்று கிடைக்குமேல், அப்பிரமாணத்தைக் கொண்டு வெளிவருவது பண்டிதர்களுக்கு உசிதமாகுமேயன்றி, அப்பிரமாணங்களைக் கொண்டு வெளிவருதல் உசிதமாகாது. நிற்க.

ஸ்ரீமகா சிவபுராணத்தின் ஒரு பகுதியான வாயுசம்மிதை உபமன்னியு கிருஷ்ண சம்வாதத்தில், மகா பாசுபதத்தை நிரூபிக்குமிடத்து மகா பாசுபதயோகமென்பது வைதிக பாசுபதமேயன்றி, அவைதிக பாசுபதமன்று. இத்தாந்திரிகர்கள் கொண்ட காமிகாதி இருபத்தெட்டாகமங்கள் முதலிய சாஸ்திரங்கள் அவைதிக பாசுபதங்களெனவும், மகா பாசுபதயோக மாகாதெனவும் விரிந்து கிடப்பதைச் சிவதத்துவ விவேகத்தினும் பிரமவித்தியா வேதாகமபிரமாண்ய விசாரபங்கத்தினும் அநேக பிரமாண வசனங்களை யெடுத்து நிரூபித்திருப்பதைக் கண்டு, இனியேனும் இக்கடிதர் தெளிவாராக.

மேலும் சூதசங்கிதையில் சைவாகமங்களிற் குறிக்கப் பெற்ற தருமங்களிலும் மேலானது ஸ்மார்த்த தருமமென்றும், அவைகளுக்கும் மேலானது வைதிக மென்றும், அதன்மேல் வேறு எதுவு மில்லையென்றும் விரிவாய் எடுத்தெழுதியிருப்பதை நவீன சைவராகிய சாமக்குளம் வெங்கட்டரமண தாசருக்கு விடையாக வெளிவந்த ஷை மகுடமுள்ள பிரமவித்தையிற் காண்க.

இதுநிற்க; சென்னையிலே தம்மை யின்னரெனக் காட்டாது என்று தொடர்ந்து ஒருவர் பலபேர் பெற்ருர் என்று பிரமவித்தியாவிலெழுதிய கடிதக் காரரை யிவர் பரிகசித்தார். அது உண்மையாயின், பத்திரிகைகளில் கடிதமெழுதுவோர் இயல்பறியாக் குற்றமேயன்றி வேறென்னும்!

மேலும் எவர் எவ்விஷயத்தை யெழுதினும் அவர் அவ்விஷயத்திற்கு அதிகாரியோ அல்லவோ எனக் காண்பார் ஐயுருவண்ணம் ஓர் சைவர், வேதாந்தி, தத்துவ விசாரணை புரிவோன், ஆரியன் என்றெழுதியது குற்றமாகாது. மற்று ஞானக் கண்ணய்யர், போப்பையர் வரை அதிகார வரையின்றிச் சிதைந்து கிடக்கும் அய்யர் பட்டம் வேதாந்த சித்தாந்தங்களின் அதிகாரத்தைக் கொடுக்க ஆற்றலற்றதாகலின், அவ்வாறெழுதுவது அக்கடிதர் நினைத்தபடி குற்றமாமேயன்றி, இஃதங்ஙனமாகாது. பின்னும் பதினன்கு வித்தைகளின் பற்றும், வைதிகங்களான நான்கு வர்ணங்களில் பிந்து க்ஷேத்திர சுத்தியுடன் பிறப்பும், ஆரியாவர்த்த வெல்லைகடவாது கங்காதி ஸ்ரீபுண்ணிய தீர்த்தங்களும், ஸ்ரீகைலாசாதி மகா க்ஷேத்திரங்களும், மார்க்கண்டேய உபமன்னியு முதலிய மகா முனிவர்கள் வாசஞ்செய்த திவ்வியாசிரமங்களும் நிறைந்து, சிருஷ்டி காலந்தொடங்கி இன்றுவரை வேதாத்தியயன வைதிக கருமானுஷ்டானங்கள் குறைவு பெருது நிலைபெற்ற மகா புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் ஜனித்த மகாபாக்கியமுந்தான் வேதாந்தாதி சற்சாஸ்திரங்களில் முக்கிய அதிகாரத்துவத்தை யுண்டுபண்ணு மென்பது சுருதி ஸ்மிருதி புராணேதிகாச ஆகமாதியான பிரமாண நூல்களில் ஒப்ப முடிந்ததோர் சித்தாந்தமன்ருே?

இஃதிங்ஙனமிருக்க; இக்காலத்திற் கேற்ற கோலங்கொண்ட சில இங்கிலீஷ் படிப்பாளிகளும், முற்றிலும் படிப்பற்ற இருகாற் பசுக்களும் இவ்வுண்மையை யறிந்து ஞானுதி காரம் குலத்தாலன்று, கோத்திரத்தாலன்று, வருணத்தாலன்று, வமிசத்தாலன்று, க்ஷேத்திரத்தாலன்று, மற்றதாலன்று, எக்காலத்தும்

வரலாறு.

கடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் வேதவேதாந்தாதிகளைப் பிரமாணமாகக்கொண்ட வைதிகச் செல்வர்கள் வாழாநின்ற பரதகண்டத்தின் தென்பாகமான தமிழ் நாட்டின்கண் சிலவருஷங்களாகச் சிற்சிலவிடங்களில் வைதிகர்களான அத்துவிதிகளுக்கும் தாந்திரிகர்களான துவிதிகளுக்கும் தமிழ்ப்பாஷையில் வாதம் நடந்து வந்ததென்பதும், அதில் துவிததாந்திரிகர்கள் எவ்வாற்ருனும் விடையிறுக்க இடனின்றிப் போனுர்களென்பதும் அனேகர் அறிந்த விஷயமேயாம்; இவ்வாதம் புரிந்த துவித தாந்திரிகரில் ம-ா-ா-ஸ்ரீ யாழ்ப்பாணஞ் செந்திநாதையரவர்க ளொருவரென்பதும் அனேகர் அறிந்த விஷயமேயாம். இவர் வைதிக விரோதமாக எழுதிய விஷயங்களுக்கு மறுப்பாக வந்த நூல்கள், "பசு சச்சிதாநந்த முடையதா?" "துவிதசைவ மறுப்பு" "பேதவாததிரஸ்காரம்" "திருமந்திரவிசாரணை" ஆகிய நான்காம். இவர் இதற்கு எதும் பேசாது மௌனமாயிருந்து பின்னிடைந்து விட்டாலும் இதற்குச் சம்பந்தம் எதுயில்லாது நிரேதுவாய் "விஜயத்துவஜம்" என்னுஞ் சமாசாரப் பத்திரிகையில் முன் துன்முகிஞு மார்கழி௴ 32௳ முதல் சிலபத்திரிகைகளில் "மகாபாசுபதாஸ்திரம்" என்ற மகுடங் கொடுத்து, சுருதி யுக்தி அனுபவங்களுக்கு முற்றும் விரோதமான ஓர் விஷயம் எழுதினுர். அது பயனற்ற தோர்விஷயமாயினும் அது காரணமாக வைதிகத்திற்கும் தாந்திரிகத்திற்கும், அத்துவிதத்திற்கும் துவிதத்திற்குமுள்ள தாரதம்மியங்களும், வைதிக அத்துவிதங்களின் மேன்மையும் அகங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளத் தெளிய விளங்குகின்றமையான் அதற்கும் ஓர் மறுப்பெழுதுதல் உலோகோபகாரமென் றெண்ணி, ப்ரம்மஸ்ரீ நாகலிங்க சாஸ்திரியாரவர்கள் "மகாபாசுபதாஸ்திர பராவர்த்தனப் பிரயோகமென்னும் வைதிகசந்திரமௌலி" என்ற ஓர் நீண்டவிஷயத்தைச் சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திரிகைகளில் வரைந்து, வேதவேதாந்தஉண்மையினைச் செவ்வனே விளக்கிக்காட்டினுர். இவ்வாசிரியர் ஆரம்பத்தில் சுருக்கமாய் முடியுமென்று கருதினும் விஷயம் மேன்மேலும்பெருகிக்கொண்டே சென்றமையால் ஷை செந்திநாதையர் வரைந்ததற்கு அது பன்னிரண்டுபங்கு அதிகமாய் விரிந்து விட்டது. இவ்வாதத்தால் வெகு அரியபெரிய விஷயங்கள் வெளியாயின. இத்தகைய அரியபெரியவிஷயங்கள் வெளிவருதற்கும், தமது பட்சம் வேதாதிப் பிரமாணம் யுக்தி அனுபவம் இவ்வளவிற்கும் மாறுபட்ட அவைதிக மார்க்கமென யாவரும் உணர்ந்து கொள்வதற்கும் எதுவாய்நின்ற யாழ்ப்பாணத்துச் செந்திநாதையரை யார்தான் வியந்துகொண்டாடமாட்டார்கள்! இவர் இதுமாத்திர மன்று; உபநிஷத்து, சூதசங்கிதை யிவற்றினும் புகுந்து, இவர் பக்கத்தின ரெவரும் இதுகாறும் பேச அருவருக்கத்தக்கதான விஷயங்களை யெல்லாம் பேசி ஓர் வாதஞ் செய்தார். அதற்கும் ஓர் மறுப்பு ப்ரம்மவித்தியாவில் இப்போது வந்துகொண்டிருக்கிறது. அது இரண்டாம்பாகமாய் இனி வெளிவரும்.

இவ்விஷயம் ப்ரம்மவித்தியாவின் இடையிடையில் வந்துள்ளதாகலின் இலக்கம் தொடர்ச்சியாயிராது. ஆயினும் உள்ள இலக்கந் தொடர்ச்சியாய் இதனடியில் காட்டப்பட்டிருக்கின்றது; அது வருமாறு:—

ப்ரம்மவித்தியா அநுபந்தத்தொடர்ச்சி.

௧௦-ம் புத்தகம்.		பக்கம்.
* ௧௬-வது பத்திரிகை.		௨௨௧,௨௨௨.
௨௪-வது	,,	௩௨௩,௩௨௪,௩௨௫,௩௨௬,௩௨௭,௩௨௮,௩௨௯, ௩௩௦,௨௩௧,௩௩௨.
௧௧-ம் புத்தகம்.		
௧-வது பத்திரிகை.		௧௩,௧௪,௧௫,௧௬,௧௭,௧௮,௧௯,௨௦.
௨-வது	,,	௩௩,௩௪,௩௫,௩௬,௩௭,௩௮,௩௯,௪௦.
௩-வது	,,	௫௩,௫௪,௫௫,௫௬,௫௭,௫௮,௫௯,௬௦.
௪-வது	,,	௭௩,௭௪,௭௫,௭௬,௭௭,௭௮,௭௯,௮௦.
௫-வது	,,	௯௩,௯௪,௯௫,௯௬,௯௭,௯௮,௯௯,௧௦௦.
௬-வது	,,	௧௧௩,௧௧௪,௧௧௫,௧௧௬,௧௧௭,௧௧௮.
௭-வது	,,	௧௨௯, ௧௩௦, ௧௩௧, ௧௩௨,௧௩௩,௧௩௪,௧௩௫, ௧௩௬.
௮-வது	,,	௧௪௯,௧௫௦,௧௫௧,௧௫௨,௧௫௩,௧௫௪, ௧௫௫, ௧௫௬.
௯-வது	,,	௧௬௯,௧௭௦,௧௭௧,௧௭௨.
௧௦-வது	,,	௧௮௯,௧௯௦,௧௯௧,௧௯௨.
௧௧-வது	,,	௨௦௯,௨௧௦,௨௧௧,௨௧௨.
௧௨-வது	,,	௨௨௯,௨௩௦,௨௩௧.
௧௩-வது	,,	௨௪௯,௨௫௦,௨௫௧,௨௫௨,௨௫௩.

௧௧-ம் புத்தகம்.		பக்கம்.
§௧௪-வது பத்திரிகை.		௨௭௩,௨௭௪,௨௭௫,௨௭௬.
௧௫-வது	,,	௨௮௯,௨௯௦,௨௯௧,௨௯௨,௨௯௩.
௧௬-வது	,,	௩௦௯,௩௧௦,௩௧௧,௩௧௨,௩௧௩.
௧௭-வது	,,	௩௨௯,௩௩௦,௩௩௧,௩௩௨,௩௩௩,௩௩௪,௩௩௫, ௩௩௬.
௧௮-வது	,,	௩௪௯,௩௫௦,௩௫௧,௩௫௨.
௧௯-வது	,,	௩௬௫,௩௬௬,௩௬௭,௩௬௮,௩௬௯,௩௭௦,௩௭௧, ௩௭௨.
௨௦-வது	,,	௩௮௫, ௩௮௬, ௩௮௭, ௩௮௮, ௩௮௯, ௩௯௦, ௩௯௧,௩௯௨.
௨௧-வது	,,	௪௦௫,௪௦௬,௪௦௭,௪௦௮,௪௦௯,௪௧௦,௪௧௧, ௪௧௨.
§ ௨௨-வது	,,	௪௨௯,௪௩௦,௪௩௧,௪௩௨.
௨௩-வது	,,	௪௪௫,௪௪௬,௪௪௭,௪௪௮,௪௪௯,௪௫௦,௪௫௧.
௨௪-வது	,,	௪௬௫,௪௬௬,௪௬௭,௪௬௮,௪௬௯,௪௭௦,௪௭௧, ௪௭௨.
௧௨-ம் புத்தகம்.		
௧-வது பத்திரிகை.		௧௩,௧௪.

* $ § புத்தக இலக்கம் பத்திரிகை இலக்கம் போடப்படவில்லை

இதன் தலைவாசக ஒற்றையும், வரலாறும்,
ஆரம்பத்தில் ௨௨௧-முதல் ௩௩௨-வது வரையிலுள்ள பக்கங்களும்
மதராசு ரிப்பன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன.

எத்தேசத்தும் எப்பாஷையிலும் அஞ்ஞானாதிகாரம் கிட்டும் என வழங்கும் வார்த்தைகளை மேற்கோளாகக்கொண்டு, தம்மிடம் மேற்கண்ட உண்மை யதிகாரங்களைக் குறிக்கும் ஆற்றலற்ற சொல்லைத் தாங்கி வெளிவந்த இவரே தற்காலத்து மேற்கண்டவரைத் தழுவியவாராயிருக்க, இவர் தம்மிட மிருக்கும் குற்றங்களைப் பிறர்மே லேற்றிச் சொல்வது அறிவுடைமையன்று. இதனால் இவரது தலையில் வேதபாஹிய மூட்டை நீங்காதிருப்பதை யறிஞர் அறியாதிருப்பரோ !

இஃதோர் புறங்கிடக்க; 'மகா பாசுபதாஸ்திர' மென்னும் மகுடமுதல் 'சி. செந்திநாதய்யர்' என்னும் கையெழுத் தீறாக அக்கடிதத்திலுள்ள 212 வரிகளில் மேற்கண்ட விஷயம் வெற்றெனத் தொடுத்தலாக நீண்டும், இறுதியில் தாம் வேதாந்தியென்றாவது, சித்தாந்தியென்றாவது, சைவர் என்றாவது, வைஷ்ணவர் என்றாவது, தத்துவவிசாரணை புரிவோன் என்றாவது, ஆரியன் என்றாவது, அநாரியன் என்றாவது விளக்க ஒரு சொல்லுமின்றி அய்யராக முடிந்தது.

இவ்விஷயத்தில், முதல்வரி மகுடத்தின் பொருத்தமின்மையை முன்னரே காட்டினோம்; பின் 29 வரிகளில் தமக்கு எதிரியாய் நினைத்த ஆரியனாரைத் திட்டின திட்டுகளை விலக்கினோம். மேல் 55 வரிகளில் நீரானது தண்மையுடனிருக்குமென்று உபதேசித்தது போல், ஆரியனார் பிரமவித்தியா பத்திராதிபரது கொள்கைகளைத் தழுவி நிற்பாரென ஒரு வெற்றுரை தொடர்ந்து நின்றது. அவற்றுள் ஆரியனார் எங்கும் புராணங்களை மறுக்காது வித்தியா ஸ்தானங்களாக வொப்பி விவாதம் புரிந்துவர, அவரை இவர் விளித்துப் பயனில் பிரமாணங்களைக் கூறியதே அதின் விஷயம். அப்பால் $15\frac{1}{2}$ வரிகளில் இதுவரைக்கும் அவதரித்த மூதறிஞர்கள், வேதாந்திகள், சித்தாந்திகள், வைஷ்ணவர்கள், சாக்தர்கள், காணாபதர்கள்முதலிய எவ்வாசிரியரும்காணாததும் இவர் தமக்குத் தொல்லாசிரியரெனக் கொண்டஆன்றோரகத்திக் கனவிலும்உண்டாகாததுமான உபநிடதப்பாகுபாடொன்று குறிக்கப்பெற்றிருக்கிறது. இப்பாகுபாட்டைத்தோற்றுவித்த ஈசனருள் இவரது முன்னோருக்குக் கிடைக்காமையைப் பற்றியே யாம் மிகவும் விசனிக்கின்றோம் ! அந்தோ! சைவபாஷிய கர்த்தரான ஸ்ரீகண்டயோகிகள் வேதங்கள் ஸ்வதந்திரப் பிரமாணமென்றும், சுயம்பு என்றும், அவ்வேதத்தைக் கொண்டே தத்துவ விசாரம்செய்யவேண்டுமென்றும், நிமித்த காரணவாத முதலிய வாதங்கள் ஆகம வுண்மையையறியாதார் பிதற்றல் என்றும், எல்லாச் சாகைகளும ஒரு பொருள் கொண்டே முடிந்தன வென்றும் முடித்திருக்கின்றார்.

உலகத்தார் பெருவியப்படைய எரிமழுவேறி யேற்றுவாகனன் பெருமையை விளக்கிய ஸ்ரீ அரதத்த யோகிகளும் சுருதிசூக்தி மாலையில் வேதங்களெல்லாம் அநாதி நித்திய சுயம்புகளென்றும், ஒரு பொருள் குறித்தன வென்றும் ஸ்தாபித்திருக்கின்றார்.

"ஏகார்த்தானிபுராணானி
வேதாச்சைகார்த்தசம்சிரயா."

என்றுள்ள புராண வசனங்களினால் வேதங்கள் ஒருபொருள் கொண்டனவே யன்றிப் பலசித்தாந்தங்களைக் கொண்டனவன்றென்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது. இவ்விதமாகவே ஒவ்வொரு மதவாதிகளும் தத்தம் கொள்கைகளுக் கேற்ப வேதங்களைப் பொருள்படுத்தி யொரு பொருள்கொண்டு முடிக்கின்றனர்கள். இவ்வாறு முன்னோர் சென்ற வழியைச் சிறிதும் நோக்காது அஞ்ஞான்று அருணந்தி சிவாசாரியார் அகம், புறம், அகப்புறம், புறப்புறம் எனச் சமயப் பாகுபாடு ஸ்வகபோலக் கற்பனையாக வகுத்ததுபோன்று, இஞ்ஞான்று இச்செந்திநாதையர், உபநிடதங்களுக்குப் பாகுபாடுசெய்யத்தோன்றினார் போலும்! இவ்வுபநிடதப் பாகுபாடுகளுக்குப் பிரமாணம் யாதெனவினாவும் வினாவை யெதிர் நோக்கி அதற்கு விடையாக 13 வரிகளில் எப். ஏ., பீ. எ. முதலிய பாடங்களைத் திருஷ்டாந்தமாகக் காட்டினார். அதின் பிறகு 8 வரிகளில் தம்புத்தி போனவாறு "ஏகான்மவாத உபநிடதம்" "பாசுபதஉபநிடதம்" என வெழுதிய வுபநிடதப் பாகுபாடுமட்டும் இறகு போன வழி யெழுதியதல்லவாம்; இனி இவர் அருள்பெற்றவர்க்கே அவ்வுண்மை விளங்குமாம். பின்னர் $12\frac{1}{2}$ வரிசளில் தமக்கு இஷ்டமான ஈசமுதலிய வுபநிடதங்களில் தமதுசித்தாந்தச் சார்பான விஷயங்கள் சில விருப்பதாய்த் தமது மனப்பாலை வெளியிட்டார். இது திருடன் தலையாரி வீட்டில் ஒளிந்ததுபோல் இருக்கிறது.

சாந்தோக்கிய பிருகதாரண்ணியங்கள் ஸ்பஷ்டமாகப் பிரமத்திற்கும் உலகத்திற்கும் சம்பந்தம் மண் கட திருஷ்டாந்தங்களைக் காட்டியும், சொப்பன சத்திய வாதத்தை மறுத்தும், பின்னும் அநேக விதமாய் ஈசனன்றி வேறு பொருள் வாஸ்தவத்தில் இன்றென்றும் குறித்து நிற்பதை யிவர் அறியார் போலும். அப்பால் $76\frac{1}{4}$ வரிவரையிலும் நான்கு வசனங்களைச் சூதசம்ஹிதை யினின்றும், ஒருவசனம் சிவரகஸ்யத்தினின்றும் எடுத்துக் காட்டினார். அவை அத்தியாசிரம விரதத்தைப் புகழுகின்றன. இதனால் இவர் சித்தாந்தத்திற்கு வந்த பயன் ஒன்றும் இன்றே. இரவலுடைமை யெப்படி யொருத்திக்குச் சுதந்தரமாகாதோ, அப்படியே அந்தப் பிரமாணங்கள் இவருக்குச் சொந்தமாவது எங்ஙனே? அவை யெல்லாம் வைதிக பாசுபதத்தையே புகழ்ந்தன. அவைகளில் "அக்கினி முதலிய மந்திரமாறு கொண்டு" என இவரெழுதினமையினால், இவர் கொண்டுள்ள பாசுபதம் அதற்கு இலக்காகாதென்க.

இதனால் பாசுபதம் அவைதிக மாகாது வைதிகமாய் நின்று புகழப்பட்டமையின், இது வைதிகரை நோக்கி, இவர் விடுத்த பாசுபதாஸ்திரமாகாது! மகா பாசுபதர்களெனப்படும் வைதிகர்கள், இவரை நோக்கி விடுத்த அஸ்திர மாதலையும், தம்மை மகா பாசுபதரென இவர் மதிப்பரேல், அப்போது இவரை நோக்கிப் பிறர் விடுத்த அஸ்திர மென்றாதலையும் அறிக.

இன்னும் இவர் போன்ற பாசுபதர்களை நோக்கி, வைதிகர்கள் விடுத்த அஸ்திரங்கள் பல வுளவேனும், அவற்றுள் இது பெருஞ் சிறப்புப் பெற்றதென்றறிவிக்க, இதற்கு "மகா" என்னும் அடை சேர்ந்து அன்மொழித் தொகையாய் முடிந்தது பற்றி யிவர்கையில் எடுத்து விடுத்த 'மகாபாசுபதாஸ்திர'த்தை அம்பரீடரிடம் துருவாசர் விடுத்த பாசுபதாஸ்திரத்தைத் திருமால் ஆழி செய்ததுபோல், இவரிடமே சேர்த்தாமென்க. நிற்க.

அவர் பேர் சி. செந்திநாதய்யராம் ! நமது பேர் வைதிக சைவராம். அவர்களுக்கு இருப்பிடம் தற்காலம் ஸ்ரீ காசிப்பதியாம், எமக்கும் எமது வமிசத்தார்க்கும் இனத்தார்க்கும் இருப்பிடம் உலகந்தோன்றிய நாள் முதல் இப்புண்ணிய பூமியாம்.

ஓம் ॥

ப்ரம்மவித்தியாபத்திரிகையின்

அநுபந்தம்.

புத்தகம் ௧௦] [இலக்கம் ௨௪.

வைதீக சந்திரமௌலி.

(மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.)

முன்தொடர்ச்சி.

மீண்டும் 18-ம் எண் விஜயத்துவஜத்தில் அவ்வையர் 277 வரிகள்கொண்ட விஷயம் ஒன்று எழுதினர். அது காண்போர்க்கு மிகு வியப்பை விளைவிக்கின்றது! இவர் எங்கேனும் விபூதி, உருத்திராக்ஷம், சிவன் என்னும் சொற்களைக் கண்டால் அவை யாவும் தமது அவைதிக ஆகமங்களைப் புகழ்ந்தனவென்று மயங்கித் தடுமாறுகின்றனர். சிவபுராணம் வாயுசங்கிதை உத்தர பாகம் 18-ம் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட வைதிக பாசுபத பரமாசாரியர்களான சுவேதாசாரியராதி லகுளீசர் ஈருயுள்ளவர்களில் சிவாவதாரமூர்த்தியென மதிக்கப்பட்டவரும், சிவகீதையில் இராமருக்கு அகஸ்தியமுனிவரா லுபதேசிக்கப்பட்ட வேதசார சிவஸஹஸ்ரநாமத்துச் சிவாம்சமாகப் புகழப் பெற்றவருமான வைதிக சிகாமணி ஜெகிஷவ்விய மகாமுனிவர் இயற்றிய மகேதிகாசமான சிவரகசியம் தமக்குரியநூலெனஎடுத்ததே அம்மயக்கத்திற்குக் காரணமாம். அம் மகேதிகாசம் ஆறும் அம்சத்தொடக்கத்தில் பிரம சூத்திரங்க ளெல்லாம் சுலோக ரூபமாய் அத்வைதபரமாக வுரைசெய்யப்பட்டன; அப்பொருளையே ஜகத்குரு சுவாமிகளுங் கொண்டார். மேலும் அதே சிவரகசியம் நவமாம்சத்தில் சங்கரகுருநாதன் திருஅவதாரத்தையும் தீக்ஷிதேந்திரர் திருவவதாரத்தையும் குறித்திருக்க அச்சிவரகசியம் மேற்குறித்த ஸ்ரீமதாசாரியர்களது கருத்திற்கு மாறான அர்த்தங் கூறுவதாக இப்பூர்வபக்ஷியார் மயங்கியதைப் பற்றி அறிஞர் எள்ளி நகையாடாதிருப்பரோ! மேலும் இவர் அச்சிவரகசியத்திலிருந் தெடுத்த வசனம் இவர்க்கு அநுகூலமாமோ எனக் கவனிப்பாம்.

பூத்யை ப்ரமாதோ ந விதேய இத்யேஷ
தேவி தைத்திரீயா ஹி ஸமாமநந்தி ॥

சிவபிரான் உமையே யென்று விளித்து "பூதி எனப்படும் பாசுபதவிரதத்தை அனுஷ்டித்தலில் அஜாக்கிரதையாயிருத்தலொண்ணாது எனத் தைத்ரீயசாகையுடையார் உரைக்கின்றார் என்று திருவாய்மலர்ந்தருளினதாய்ச்சொல்லப்பட்டது." என்று எடுத்து இறுதியில் இவையெல்லாம் காமிகாதி அவைதிகாகமங்களிற் சொல்லப்பட்ட "ஔத்திரி" தீட்சையைக் குறிப்பன என்கிறார் பாருங்கள். 'பூதி' என்பது திருநீற்றின் பெயரேயன்றி, இவர் கூறிய வண்ணம் பாசுபத தீட்சையின் பெயராகாது. இவர்க்கு

ந விதௌ பர: ஶப்தார்த: ॥

"விதியில் இரண்டாம்பொருள் கொள்ளக்கூடாது."

என்றுள்ள ஜைமினிசூத்திரம் தெரியாது போலும்! தெரியின் இவ்வாறு கூறுவரா!

வேதங்கட்குப் பொருளுரைப்பதெனில் மந்திரங்களுக்குப் பிராம்மணங்களைக்கொண்டும் விதிகட்குக் கற்பங்களைக் கொண்டும் உரைத்தல் வேண்டும்; இதற்கு மீமாஞ்சா நியாய வுதவியும் வேண்டும். அவைதிக பாசுபதர்க்கு அவை யெல்லாம் வேண்டுவதில்லைபோலும்!

அங்ஙனம் 'பூதி' என்னுஞ் சொல்லுக்கு

ஐஶ்வர்யகாரணாத்பூதி: ॥

"ஐசுவரிய காரணமாதலால் பூதி" என்று ஜாபாலோபநிடதமும்,

பூதிர்பூதிகரீ சைவ ரக்ஷா ரக்ஷாகரம் ஸதாம் ॥

என்று சிவபுராணம் வாயுசங்கிதை பூர்வபாகம் இருபத்தொன்பதாமத்தியாயமும் ஸ்பஷ்டமாய்ச் சொல்வதையும் அது கொண்டே ஸ்ரீபோதாயன முனிவரும்

அதாதோ த்விஜாதீநாம் ஸார்வகாலிகம் த்ரிபுண்ட்ரவிதிம் வ்யாக்யாஸ்யாம: பூத்யை ந ப்ரமதிதவ்யமிதி ஹி ஶ்ரூயதே ॥

"இனி அந்தணர்க்குத் திரிபுண்டரத்தின் நித்திய விதியை உரைப்போம். பூதியைத் தவறற்க என்று வேதமல்லவோ கூறுகின்றது?"

என்று எடுத்தார். மேலும் ஜகத்குருநாதரும் "ஐசுவரிய காரணம் என்ற வைதிகப் பொருளையே அதற்குக் கொண்டு மங்களத்துடன் கூடியது" என்று பொருள் உரைத்தார். இது அறிஞர் அறியாததன்றே! இவர் அதற்குத் (பூதி) தாம் கொண்ட அவைதிக விரதத்தையே பொருளாக்கி, ஜைமினி சம்பிரதாயத்தை யிழந்து அவைதிக வழியிற் சேர்ந்தார். மேலும் பூமியில் பாஷண்டமத கண்டன பண்டிதராக அவதரிப்பார் சங்கரரென ஜகத்குருநாதனை வெகுவாய்ச் சிவரகசியம் தெளிவாய்ப் புகழ்ந்திருக்க, அச்சிவரகசியத்தின் காலில் விழுந்த இப்பூர்வபக்ஷியார், அதனால் புகழப்பட்ட ஜகத்குருநாதன் கருத்திற்கு வேறுபாடாக, அதன் சுலோகத்திற்குப் பொருள் தேடுவது சத்துருவின்ஆயுதத்தை ஆசிரயித்துச் சண்டைக்கு வந்தவரைப் போலிருக்கின்ற தென்க. சிவபுராண முதலிய பிரமாணங்களில் சிவாம்சம் பெற்றவர்எனப்புகழப்பட்டுள்ளஜகத்குருநாத பரனைச் சிவாம் சாவதாரமாகவும் அக் குருநாதனுக்கு விரோதிகள்

பாஷண்டர்களெனவும் குறித்த சிவரகசியத்திற்கும் அக்குருநாதன் குறித்த பொருளுக்கும் மாமும்வண்ணம் பொருள்கூறியும் அக்குருநாதனை யிகழ்ந்தும் பகைத்தும் வருவார் எவரோ, அவரே அம்முனிவர் சொற்படி அவைதிகராவர் என்பதை ஐயர் சிந்திப்பாராக. மேலும் தீக்ஷிதேந்திர சுவாமிகளருளிய "சித்தாந்தலேச சங்கிரகம்" என்னும் நூலுக்கு வியாக்கியானமருளிய அச்சுத கிருஷ்ணசுவாமிகள் ஜகத்குரு சுவாமிகள் சிவாம்சம் என்பதற்குப் பிரமாணம் சிவபுராணங்களிற்காட்டினார்; அன்றி "மத்துவமத வித்வம்சனம்" என்னுங் கிரந்தத்தில் தீக்ஷிதர், தாமே "கௌரீபதியாகிய ஈசுவரனே அவதரித்து அத்வைதத்தை ஸ்தாபனஞ் செய்தாராகையால்" என்று முடிவுரைகூறினார். ஆகவே, வைதிக பாசுபதசித்தாந்த ஸ்ரீகண்ட வித்தியா குருவான அப்பய தீக்ஷிதசுவாமிகளிலும் மேலான மேதையுள்ள இவ்வையர், தாம் தேடிக்கொண்ட பிரமாணங்களுள் ஏதேனும் ஒன்றைக் காட்டினாரின்று. மேலும் இவர் எடுக்கும் மேற்கோள் யாவும் வைதிக பாசுபதத்தைப் புகழ்வனவேயன்றி இவர்கொண்ட அவைதிக பாசுபதத்தைத் தழுவியது சிறிதுமில்லை. அப்படியே வருமிடங்களில் நிரூபிப்போம். அதன் பிறகு

சுயைதர்ச்ரு ரோயைர்: யெஸ்ஸோவஸிதஸ்ஸதா।
தெஷாமெவவாரஞ்ஜா நம்ஸம்ஸாரவெஹ்சகாரணம்॥

"எவர்களாலே இந்தப் பாசுபதாத்தியாசிரம தர்ம்ம விரதம் ஆசரிக்கப்படுகிறதோ, அவர்களுக்கே சம்சாரத்தை யொழிக்கும் பரஞான மாகுமென்றுகூறிற்று"

என்று பிரமோத்தர காண்டத்தில் ஒரு சுலோகமெழுதினார். அது முற்றும் இவ்வையர்கொண்ட அவைதிக சிவாகம விதிப்படி யாசரிக்கப்பெற்ற தீட்சையன்று; அது யாதினலெனின் அச்சுலோகத்திற்கு முன்னுள்ள

உஷூலநம்த்ரிவுண்ட்ரஞ்வஜ்ஞாநாம்மகெவந ஸா
ரூ|ரூநம்திரிஸ்ரெஷ்டாசுயவர்ஸிரவிஷ்டா:॥

"உத்தூளனமும் திரிபுண்டரமும் ஞானங்கமாம் என்று ஆதரவுடன் அதர்வசிகையைப்படிக்கும் ஆன்றோர்கள் சொல்லுகிறார்கள்"

த்ரிவுண்ட்ரொஷூலநம்வெந்த்ரஞ்ஜாவாமெரொடிரெணதம்॥

"திரிபுண்டரம் உத்தூளனம் இவை ஜாபால சாகிகளால் ஆதரவுடன் சொல்லப்பட்டது."

உதிஜாவாலஸாவிந:॥

"என்று ஜாபால சாகைக்காரர் சொல்லுகிறார்கள்."

இந்தச் சுலோகங்களில் வேதோக்த பஸ்மம் குறிக்கப்பட்டமையா லென்க.

இனி இவர் சொல்லும் பிரகாரம் வேறுபஸ்மம் (அவைதிக பஸ்மம்) முத்தியைக் கொடுக்குமெனில் வைதிக பஸ்மம் முத்தியை விளைவிப்பதாக வெடுத்து அம்மறை விதியைச் சாங்கோபாங்கமாய் இறுதியளவுங் கூறும் அத்தியாய முழுமைக்கும் காலாக்கினி ருத்திரஜாபால முதலிய உபநிஷத்துகளுக்கும் விரோதம் வரும். மேலும் அப்புராணம் தாந்திரிக விரதத்தைத் தொடவேயில்லை. அதனாற்றான் அதே அத்தியாயத்தில்

ஶ்ரௌதம்ஹெஹாவரெவ்ய்ம்ஸ்யாக்கநுஷ்டாணம் வஸீதிதம்॥

"வைதிகபஸ்மமே முக்கியம்; மற்றது அவைதிகாகமோக்தாதிகள் கௌணம்"

என்றும்,

ஶ்ரௌதம்ஸ்ஸதயஸ்ஸாதம்தஜ்ஞநாமெவகீதிதம்॥

"வைதிக பஸ்மமும் ஸ்மார்த்த பஸ்மமும் அச்சிவஞானிகளுக்கேயுரியன"

என்றும்,

சுரெநூஷாவிஸவெஷாம் வாமெஹஸ்ரௌகிகம்॥

"மற்ற யாவருக்கும் வைதிக ஸ்மார்த்தமல்லாத தாந்திரிக லௌகிக பஸ்மமே சிறந்தது"

என்றும்,

97-ம் சுலோகமுதல் 109-ம் சுலோகம் வரைப் பதின்மூன்று சுலோகங்களினல் காலாக்கினி ருத்திர உபநிஷத்தில் முறையே நன்கு விரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அதன் மூன்று ரேகைக்கு 100, 101, 102, 103 வது சுலோகங்களில் வைதிகமாய தேவதைகளைச் சொல்லியிருக்கின்றது. அவற்றிற்கெல்லாம் மாறாக அவற்றைத் தந்திர சம்பந்தப்படுத்த எவரால் முடியும்?

ஸவொவநிஷதாம்ஸாரம் ஸாரொவந்ஹாஹா:॥

ஐதெவஹிநிணீதம்வாம் ஶ்ரெயஸித்ரிவுண்டகம்॥

"எல்லா வுபநிடத சாரத்தையும் ஆராய்ந்து இதுவே முடிந்தது, திரிபுண்டரமே பரமசிரேயசு"

என்று உபசங்காரத்தினல் முற்கூறிய அத்தியாயத்தின் அத்தியாசிரமாதி சிறப்பெல்லாம் சிரௌத பாசுபதத்திற்கே என்று முடிந்தது. ஆகையால் இதனிடையே ஒரு சுலோகமாத்திரம் அவைதிகாகமோக்த பாசுபதத்தைக் குறித்ததென்பது வீணினும் வீணமென்க.

ஸ்காந்தம் காளிகாகண்டம்.

ஶிரொவ்ரதமிதம் வ்ரதம்நெ உவநிஷத்ஸு ணை:॥

வெதிகீவிரஜாதீக்ஷாவ்ரதெயம் வாவநாஶிநீ|மந்த்ரஸம்ஸ்காரதீக்ஷெதிகயதெயம் தயா மஹெ॥

என்ற வசனத்தைக் காட்டி யதற்குப் பொருள்

உபநிஷத்துக்களிலே இந்தப் பாசுபத விரதம் சிரோவிரதம் என்று சொல்லப்படுமெனவும், இது பாவத்தைப் போக்கவல்ல வைதிக விரஜாதீட்சை எனப்படுமெனவும், சிவாகமங்களில் மந்திர ஸம்ஸ்காரதீட்சை என்று சொல்லப்படுமெனவும்,

என்பதாம்·

என்று கூறினர். இதிலுள்ள ஆகமசப்தத்திற்குச் சிவாகமமென்ற பொருள் உள்ளதே யாளுலும் அது சிரௌத சிவாகமத்தைக் குறிப்பதேயன்றி அவைதிக ஆகமத்தைக் குறித்ததாகச் சொல்வதற்குச் சிறிதுமிடமின்று. எங்ஙனமெனின் இது உபநிஷத்துகளிலே சொல்லப்பட்ட விரதத்தைச் சொன்னது; இவ்வைதிகவிரஜா தீட்சையைச் சிவாகமிகள் மந்திர ஸம்ஸ்கார தீட்சை யென்பார்களெனின் இதுவே ,அதுவாகாது.

வைதிகர் செய்துகொள்ளும் தீட்சையின் ஸ்தானத்தில் ஆகமிகர் அதைச் செய்துகொள்வார்களென்பதே யபிப்பிராயமாயின் இதற்கும் அதற்கும் பிரயோகம் மிகவும் வேறுபடும்.

ஸ்திரீகளுக்கு உபநயனம், விவாகம் எனப்படுமென்றல் உபநயனமே விவாகமாகாது. உபநயனத்தால் சித்திக்கும் வேதாதிகார முதலியன விவாகத்தால் பெண்களுக்குச் சித்திக்க அவர்கள் விவாகத்தால் வைதிக வர்ணுசிரமாநுஷ்டானங்களுக்கு உரியவர்களாகின்றுர்கள். இதனுற்றுன் விவாகமே யுபநயனமெனப்பட்டது. இதுபற்றியன்றே மநு

ஸ்த்ரீணாமுபநயஸ்தாநே விவாஹம் மநுரப்ரவீத்॥
ஔபாஹிகோவிதிஸ்த்ரீணாம் ஸம்ஸ்கார வைதிகஸ்ஸ்ம்ருதஃ

என்றுகூறி ஸ்திரீகளுக்கு உபநயன ஸ்தானத்தில் விவாகத்தை விதித்தார். இதைப் பின்பற்றியன்றே மற்றவர் ஸ்திரீகளுக்கு விவாகவிதியே உபநயனமாகும் என்றுர்கள்?

ஆகமதீட்சைக்கும் வைதிகதீட்சைக்கும் உள்ளவேற்றுமைகள் அநந்தம். அவைகளில் சிலவற்றை இங்குக் கூறுவாம். முக்கியமாய் அக்கினிஹோத்திரம்ஆகமங்கட்கு அசம்மதமாகும்.அவ்வாகமம் பசுயாகநிந்தையைத் தலையிற்கொண்டுள்ளது. ஆதலால் அந்த ஆகமத்தால் நிந்திக்கப்படுகின்ற அக்னிஹோத்திர பஸ்மமே உபநிஷத்துகளிலும் உபபிருங்கணங்களிலும் முக்கியமாகச் சொல்லப்பட்டதாகும். இதுதான் விரஜாதீட்சையில் உண்டானதென்றிதற்கடுத்த இரண்டாவதாகச் சந்நியாசபூர்வாங்கமாக அநேகஉபநிஷத்துகளிலும் பல புராணங்களிலும் ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்டது. இத்தகைய வைதிகமந்திர சம்ஸ்காரமாவது மேற்கண்ட விரஜாநுவாக உச்சாரண மாவது இவர் கொண்ட தீட்சையிற் காணப்படாதது. அது பிராசாத முதலிய மந்திரங்களால் செய்யப்படுவது. வேதத்திற் சொல்லப்பட்ட உத்தமதருமத்தைப்புராணங்கள் விரிக்கின்றனவேயன்றி மற்றத் தந்திர தருமங்களை விரிப்பனவல்ல.

இதிஹாஸபுராணாப்யாம் வேதார்த்தமுபப்ரும்
ஹயேத்॥

" இதிகாசத்தாலும் புராணங்களாலும் வேதங்களைப் பொருள்படுத்துக."

என்று வியாசராதி ஸ்மிருதிகர்த்தர்களும் புராணங்களும் சொன்னதன்றி, எங்கும் தந்திரங்களைப் புராணங்கள் பொருள் படுத்தக்கண்டோமில்லை. அற்றேல்

ஶிவாகமைஸ்துவிஸ்தார்ய ஸம்யகேவோபப்ரும்
ஹிதஃ॥

"சிவாகமங்களால் அது விரிவாய்ப் பொருள் படுத்தப்பட்டது."

என்று சிவபுராணங் கூறுதல்பற்றி வேதங்களுக்குப் புராணங்களாகிய உபபிருங்கணங்களைப் பார்க்கிலும் ஆகமங்கள் மிகவும் சிறந்த உபபிருங்கணங்களாகையால் அவைகள் விரித்ததும் வேதப்பொருளாகாவோ வெனில், அன்றன்று; அங்குச் சிவாகமங்களெனப்பட்டவை சிரௌத சிவாகமங்களேயன்றிக் காமிகாதிக ளாகாவென்க. இவ்வுண்மை சிவபுராணத்தைப் பற்றி விசாரிக்குமிடத்து வெளிப்படுத்தப்படும்.

நிற்க: தீட்சைஎனப்படும் சொல் ஒற்றுமை கொண்டு வேதத்திலுள்ள யாகதீட்சையும் சிவாகமத்திலுள்ள சைவ ஔத்திரியும் ஒன்றுமோ? மேலும் சூதசங்கிதை பிரமகீதை இரண்டாம் அத்தியாயத்தில்

ஸர்வஸ்ஸகாரணே நஷ்டேநாஸ்தி யச்சக்திதஃ॥
யதாபூர்வம் ஸ்ருஷ்டிமேவ ஸர்வாந்ஸ்ருஜத
ப்ரபுஃ॥

தம் ஹரம் கேசிதூசுஸ்தி கேசித்விஷ்ணும் ஸநாதநம்॥
கேசிந்மாயேதிவேதந்தி கேசிதிந்த்ராதிதேவதாஃ॥
கேசித்ப்ரதாநம் த்ரிகுணம் ஸ்வதந்த்ரம்கேவ
லம்ஜடம்॥
அணவஃகேசிதூசுஸ்தி ஶப்தம்கேவநபோஹிதாஃ
க்ஷணப்ரத்யயம்விஜ்ஞாநம்கேசிதாஹுஃ ஸௌகதாஃ॥
ஶூந்யமஸ்ஸஜ்ஞம்ஸராஃகேசித் நிர்வாச்யம்வி
மோஹிதாஃ॥
கேசித்ஸோதாநிவேதந்திநிஸர்கம்கேசநஹஸ்ரஸ்॥

அப்பரமேசுவரன் தனது சத்தியால் சமஸ்த சராசரப்பிரபஞ்சங்களையும் முன்போலச் சிருட்டித்தான். இவனைச் சிலர் அரன் என்பர்; ஸ்ருஜத்யஸாத் ஸம்ஹரதி॥ என்று சிவஞானபோதம் முதல் சூத்திரம் சொல்லுதலால் இவர் சைவ ஆகமிகர். சிலர் விஷ்ணு என்பர்; இவர் பாஞ்சராத்திரிகள். சிலர் மாயை யென்பர்; இவர் சாக்தர். சிலர் இந்திராதிகள் என்பர்; இவர் மீமாஞ்சக ஏகதேசிகள். சிலர் முக்குணமயமும் சடமயமுமான பிரதானத்தையே சுதந்தரமாய்க் காரணமென்பர்; இவர் சாங்கியர். சிலர் அணுக்களென்பர்; இவர் தார்க்கிகர். சிலர் நாதமென்பர்; இவர் நாதப்பிரமவாதிகளான வையாகரணர். சிலர் க்ஷணிக அறிவே என்பர்; இவர் யோகாசாரபௌத்தர். சிலர் சூனியமென்பர்; இவர் மாத்திமிகபௌத்தர். சிலர் சொல்லற்கரிது என்பர்; இவர் சதசத்வாதிகளான ஆருதகர். சிலர் பூதஙகளென்பர்; இவர் சார்வாகர். சிலர் சுபாவமென்பர்;

இவர் வைத்தியராதியோர் என்று கூறினமைகொண்டு வேதாந்தங்களிலும்சிவாகமங்களிலும் சார்வாகாதி பாஷாண்ட தந்திரங்களிலுமுள்ளது ஒன்றேயாமோ? பிரமவாதிகள் பிரமத்தைக்குறிக்கும் ஸ்தானத்தில் அவரவர் சத்தம் சித்தாந்தங்களுக்கேற்றவாறு சில யுக்திப்போலிகளால் உலக காரணத்தைப் பல வகையாகச் சொல்வார்களென்பதே அதன் கருத்து. பிரமத்தைச் சிலர் சூனியம் என்பதுபோல இக்காளிகாகண்ட வசனமும் இவ்வுபநிடதம் பிரசித்தவிரதத்தையே, சிவாகமம் மந்திர சம்ஸ்கார தீக்ஷையெனக் கூறுமென்றதாகக் கொள்ளவேண்டும். அவ்வாறில்லாதவரையில் சிவாகமங்களில்சொல்லப்பட்டபஸ்ம சம்பிரதாயம் வைதிகத்துடன் முற்றிலும் வேறுபடுவேது நியாயமில்லையாமென்க. ஏகதேசமாயினும் வைதிகத்தை அனுசரித்தேயிருக்குமென்றபடியாம். இந்த வசனம் வேதங்களையும் உபநிஷத்துகளையும் தழுவிநின்றமையின் மேலே சொல்லப் போகிற சிரௌத சிவாகமவிஷயமேயாம். ஆகவே, இவ்விஷயம் இவருக்குச் சிறிதும் சாதகஞ் செய்யவில்லையென்க.

சூதசங்கிதை ஞானயோககாண்டம் ௧௪-ம் அத்தியாயம்.

गुरुणा करुणा[illegible]उपदिष्टं तदनुज्ञया
[illegible] कामसिद्ध्यै उपायग्रहणं व्रतः॥

"அதிகமான கருணையுடன் கூடிய குரு பூர்வம் அநுஞ்ஞையுடன் உபதேசித்ததும் தருமார்த்த சாமசித்தியைத்தருவதுமான உபாயத்தைத்தழுவுவதே விரதமாம்" என்றுயோகத்தின் எட்டங்கங்களிலொன்றாகிய நியமத்தின் ஏகதேசவிரதத்தை நிருபித்து,மேல்

अथवाथर्ववेदोक्तैर्मन्त्रैः [illegible]
[illegible]॥

सर्वाङ्गोद्धूलनं चैव व्रतं प्राहुर्मनीषिणः॥

"அல்லது அதர்வண வேதத்தில் சொல்லிய மந்திரங்களால் வெண்ணிறமுள்ள திருநீற்றை யெடுத்துச் சர்வாங்கோத்தூளனம் (திரிபுண்டரத்திற்கு உபலட்சணம்) செய்தால் அதையும் விரதமென்பார்கள் புத்திமான்கள்"

என்று தமக்கு அபிமதமான விரதசொற்பொருளுரைத்த வேறு சில ஆசிரியர் கருத்தையுங் காட்டினர். அங்ஙனே இதற்கு வேறுபட, பெயரும் வேறுபடும் என மேலே காட்டுகின்றார்.

एतद्वेदशिरोनिष्ठाः प्राहुः पाशुपत[illegible]
[illegible]॥

केचिच्छिरोव्रतं प्राहुः केचिदत्याश्रमं विदुः॥

केचिद्व्रतमिति प्राहुः केचिच्छाम्भवमैश्वरम्।
अस्य व्रतस्य माहात्म्यं श्रुत्यन्तेषु संस्थितम्।
सर्वपापहरं [illegible] सर्वज्ञानप्रकाशकम्॥

"இதை வேதாந்த நிஷ்டையுள்ளாரில் பாசுபத விரதம் என்பவர் சிலர், சிரோவிரதம் என்பவர் சிலர், அத்தியாசிரமமென்பவர் சிலர், விரதமென்றே சொல்பவர் சிலர், சாம்பவமென்பவர் சிலர், மற்றுள்ளார் ஈசுவர விரதமென்பர். இத்தகைய விரதப் பெருமை வேதாந்தங்களிலுண்டு. இது எல்லாப் பாவங்களையுங் கெடுக்கும்; எல்லா அறிவையுங்கொடுக்கும்."

என்றுள்ளவற்றை யாலோசித்துப் பார்க்குமிடத்து இவ்விரதம் வேதாந்திகள் யாவருக்குமே ஒப்பமுடிந்ததாகும்; இதற்குப் பாசுபத மென்பது பெயர். இதுவே அதர்வசிரசில் எடுக்கப்பட்டது. அதர்வசிரசின் பெருமை கௌதமர், போதாயனர் முதலிய அநேக மகா ரிஷிகளாலும் தரும சூத்திரங்களாலும் மற்றுமுள்ளபலமுனிவர்களாலும் குறிக்கப்பட்ட விஷயம். இதுமற்றோரிடம் வரும்.ஆகவே,சிலரிதைச் சிரோவிரதமென்று சொன்னாரென்ற ஏகதேச அபிப்பிராயத்தால் இதைச் சிரோவிரதமென்று சொல்லத் தடையில்லை. ஆயினும் வேறு எதுவும் சிரோவிரதம் ஆகாதென்பது வீண் பிடிவாதமாம். மேலும் இது வேதாந்தங்களில் சொல்லப்பட்டது என்றுரைத்த இச்சங்கிதையும் இச்சங்கிதையைப்போன்ற பிரமசங்கிதையின் உத்தர காண்டமான பிரமோத்தரகாண்டமும் மற்றுமுள்ள எப்புராணமும் என்றார்; சுவேதாசுவதராசாகிகள் என்றார்; அதர்வசிரசுடையார் என்றார்;கைவல்லியசாகிகள் என்றார்;காலாக்கினி ருத்திரர் என்றார்; ஜாபாலர் என்று பஸ்மபர உபநிடதங்களைப் பெயரெடுத்தோதினாற்போல முண்டகோபநிஷத்தை யெடுக்காது விட்டதற்குக் காரணம் யாதெனில் அது ஏகதேசமதமும் வியாசாசாரியாருக்கும் அவ்வளவு எல்லாச் சாகிகளுக்கும் உபயோகமன்றென அபிப்பிராயப் படும் விரதமும் ஆதலாலென்க வியாசர் இவ்விஷயத்தில் சம்மதிபெறுதவர் என்பதற்குக் காரணம் பின்னர்க் காட்டுவோம். மேற்கண்ட வசனத்தில் இது ஆகமாந்தங்களில் உண்டென்பதற்கு வேதாந்தங்களென்று எதனால் பொருள்செய்தீரெனில் வித்தியாரண்ணியசுவாமிகளது பாஷியத்தானும் அதே அத்தியாயம் யோகியாகிய நியமிக்கு

[illegible]॥

[illegible] हविः।
श्रौत[illegible]
[illegible]॥

या वेदबाह्याः स्मृतयो याश्च काश्च कुदृष्टयः॥

ஶ்ரௌதஸ்மார்த்தநிஷ்டா: ப்ரத்யயோ நிஷ்டாஸ்திகதா ஸ்ம்ருதா:॥

குருணா சோபதிஷ்டேபி தந்த்ரஸம்பந்தவர்ஜித:॥

வேதோக்தேநைவ மார்கேண மந்த்ராப்யாஸோ ஜபஸ்ம்ருத:॥

வைதிகேஷு ச ஸர்வேஷு ஶ்ரத்தா ஸா மதிருச்யதே॥

ப்ரத்யகாத்மதயா தத்வம் வேதாந்தஶ்ரவணம் புதா:॥

தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந வேதமந்த்ரம் ஸமப்யஸேத்॥

வேதோக்தேந ப்ரகாரேண க்ருச்ச்ரசாந்த்ராயணாதிபி: ஶரீரஶோஷணம் யத்தத் தப இத்யுச்யதே புதை:॥

''அவைதிகனுன பிராமணனுக்கு எது கொடுக்கப்பட்டதோ, அது இவனுக்கு உபகாரமாகாது; சாம்பலிற்செய்த ஆகுதியாம்''

என்றும்,

''ஶ்ரௌதத்திலும் ஸ்மார்த்தத்திலுமுள்ள விசுவாசமே ஆஸ்திக்கியமாம்''

என்றும்,

''எவைஎவை வேதபாஹியங்கள், எவை எவை குதிருஷ்டிகள், அவைஅவை நிஷ்பலங்கள்; இருள்நிறைந்த நரக ஏதுக்கள்''

என்றும்,

''குரு உபதேசித்தபோதிலும் தந்திரசம்பந்த மில்லாதபடி வேதத்திற் சொல்லப்பட்ட வழிகொண்டே ஜபித்தல் மந்திர சபமாம்''

என்றும்,

''எல்லாவித வைதிக கன்மங்களிலும் சிரத்தையே மதியெனப்படும்''

என்றும்,

''பிரத்தியகாத்துமாவென வறிவது வேதாந்த சிரவணம்''

என்றும்,

''ஆகையால் சர்வமுயற்சியும் செய்து வேத மந்திரத்தையப்பியாசிக்கவேண்டும்''

என்றும்,

''வேதத்தில் சொல்லப்பட்ட மார்க்கத்தையே கொண்டு கிருச்சிரம், சாந்திராயணமாதிகளை அனுஷ்டித்தலே தவம் என்றும் நிரூபித்து''

ஸித்தாந்தஶ்ரவணஞ்சைவ ஹ்ரீர்மதிஶ்ச ஜபோ வ்ரதம்॥

''தவம், சந்தோஷம், ஆஸ்திக்கியம், தானம், ஈசன் பூசை, சித்தாந்த சிரவணம், வெட்கம், மதி, சபம், விரதம்''

என்று பத்து நியமங்களில் ஒன்பதைச் சுத்த வைதிகமாகவும், மேற் காட்டியபடி தந்திர சம்பந்தமற்றதாகவும் கூறினமைபற்றி, இங்கு விரதபதார்த்தத்தில் தந்திரசம்பந்தம் கூடாதென்பது நியாயமும் பிரகரணமுறையு மாதலின் அங்ஙனம் பொருள்படுத்திளுமென்க.

இது நிற்க; புராணங்களில் சிலவிடத்தில் தாந்திரிக தருமங்கள் புகழப்படுமாயினும் அது அவ்வத்தந்திர தீட்சாவான்களுக்கேயன்றி மற்றவர்க்கு இன்றென்று அதேசூதசங்கிதை நிரூபிக்கின்றது. அது வருமாறு:—

அஷ்டாதஶாநாம் வித்யாநாம் வேதாந்யா: ஸ்வஸ்ததா:॥

வித்யா வேதாநுஸாரேண ப்ரவ்ருத்தா: ஸர்வஸோபாநா:॥

தத்ராபி ஸர்வஸர்வாஸு க்வசிதம்ஶ: க்வசித் க்வசித்॥

ஶிவாகமாநுஸாரேண தத்பேதாநுஸாரத:॥

விஷ்ண்வாகமாநுஸாரேண தத்பேதாநுஸாரத:॥

''அஷ்டாதச வித்தைகளில் வேதங்களல்லாத எல்லா வித்தைகளும் வேதங்களை அனுசரித்தே சர்வசோபானமாய்ப் பிரவர்த்திக்கின்றன. அங்ஙனமாயினும் அவற்றில் எல்லாவற்றிலும் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு அம்சம் சிவாகமங்களையும் அவற்றின் பேதங்களையும் விஷ்ணு ஆகமங்களையும் அவற்றின் பேதங்களையும் அநுசரித்துச் சொல்லப்பட்டனவுமுண்டு.''

என்றும்,

அதீதி விஶேஷேண க்ரமேணைவ விமுக்தயே॥

ப்ரவர்த்திதே முநிஶ்ரேஷ்டா: ஸத்யமேவ மயோதித:॥

தத்தந்த்ரேஷு யதாத்யாது தீக்ஷிதாஸ்தந்நிஷ்டா:॥

நாம்ஶஸ்தைரேவ ஸம்ப்ராப்ய ஸ்வஸ்தாநைநைவ வைதிகை:॥

உக்தஸம்ஹிதாஸ்வேவ வேதமார்காநுஸாரிணீ॥

வேதேதராகமாயீ ந: க்வசிதம்ஶோ ந வித்யதே॥

"அவை அதிகாரி விசேடத்தால் காலத்தால் முத்தி கொடுப்பனவாய்ப் பிரவர்த்தித்தன. யான் உண்மையை உரைத்தேன். அவ்வத் தந்திரங்களின் தீட்சையடைந்த அவனவனுக்கு அது அது கொள்ளற்பாலதே யன்றி அவ்வம்சம் வைதிகர்க்கு எவ்வளவுங் கூடாது. யானுரைத்த இச்சங்கிதை மிகச் சிறந்தது. வேதமார்க்கத்தையே தழுவியது; வேதவிருத்தமான ஆகமானுசாரியான பாகம் இதிலில்லை."

என்றும்

எக்ஞவைபவகாண்டம் 45ம் அத்தியாயங் கூறுகின்றது. இதனால் மேற்கண்ட காளிகாகண்டவசனம் அவைதிக ஆகம விஷயமாயினும் ஆகலாம். மேலும் 'உபநிடதங்களிலே இந்தப் பாசுபத விரதம் சிரோவிரதம் என்று சொல்லப்படும் என்றது மிகவுந் தவறு. சிரோதவிரதம் என்ற வொன்று வேதவிரதமாகச் சொல்லப்பட்டதாயினும், அது பஸ்மதாரணத்துடன் கூடியதாயினும் அது அதர்வ சிரசுமுதலிய விடத்து உபதேசிக்கப்பட்ட பாசுபத விரதமன்று; மற்று அதுபோன்றதோர் பஸ்மதாரண விரதமே. அதாவது வைகானசத்தில் அக்கினி ஓமாந்தங்களில் ரட்சாபஸ்ம புண்டரம் விதிக்கப்பட்டதுபோல, ஸமாசாரம் என்ற வாதர்வண கிர்ந்தத்தில் அக்கினிதாரண விரதாங்கமான பஸ்மதாரணமும் சொல்லப்பட்டது. இவ்வுண்மையை அதர்வண வேதத்திற்குக் கௌஷிதர் எழுதிய சூத்திரத்திற் காணலாம். அதையே வேதவியாசர் சூத்திரத்தில் எடுத்தார். பிரமமீமாம்சா சாஸ்திரத்தில் மூன்றுமத்தியாயம் மூன்றும் பாதம் மூன்றும் சூத்திரத்தில்

स्वाध्यायस्य तथात्वेन हि समाचारेऽधिकाराच्च सववच्च तन्नियमः॥

"சுவாத்தியாயமேயாம் (அவரவர்க்கே யுரியசாகை) ஸமாசாரம் அதிகரித்தமையால் ஸவனங்கள்போல் அதனியமமாம்."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் வேதவியாசரே ஸமாசாரக் கிரந்தத்தால் சொல்லியபடி அது அதர்வண சாகிகளுக்கு வேதவிரதமேயன்றி, சர்வோபநிஷத் வித்தியாங்க மல்லவென்றும் அதற்கு எழுவகைக் குரிய யாகங்களைத் திருஷ்டாந்தமாயும் காட்டினராகையால் அவர் சூத்திரத்திற்கேற்ப வியாக்கியானஞ் செய்த சங்கராசாரியரை அறியாமையையும் பிணக்கையுங் கொண்டு அய்யர் நிந்தித்தது எமக்கேதுங் குற்றமாகத் தோன்றவில்லை. இச்சூத்திரத்திற்கு இவர் தமது குருவென ஸ்வீகரித்துக் கொண்டாடும் நீலகண்டரும்

सर्वोपनिषत्प्रत्ययं वेदान्तविशेषात्॥

என்ற [௩-அ-௩-பா-௩-சூ] வியாக்கியானத்தில்,

शिरोव्रतं नाम व्रतविशेष आथर्वणिकानां व्रतं नेतरेषाम्॥

"சிரோதவிரதம் என்ற ஓர் விரத விசேஷம் ஆதர்வணிர்க்கே யன்றி மற்றவர்க்கு விதிக்கப்படவில்லை."

என்றுமாம்

௩-ம் அத்தியாயம் ௩-ம் பாதம் ௩-ம் சூத்திரம்.

स्वाध्यायस्य

என்ற சூத்திரத்தில்,

क्रियावद्भिर्वेदैस्तेषामेवैतां ब्रह्मविद्यां वदेत इति शिरोव्रतमिति स्वाध्यायाङ्गमेव न तु विद्याङ्गं नैतदचीर्णव्रतोऽधीत इति स्वाध्यायसम्बन्धावगमात् समाचारे वेदव्रतेषु वेदव्रतत्वेन शिरोव्रतस्य व्याख्यानात् ब्रह्मविद्यामिति तु ब्रह्मशब्दो वेदविषयः तत्सामान्यात् सर्वविद्यास्वेकैव शिरोव्रतं तैश्चीर्णं न विद्याभेदकम्॥

அதர்வணவேதத்தில் முண்டகசாகையில் அவருக்கே இந்தப் பிரம்மவித்தையை யுபதேசிக்கவேண்டும். எவர்கள் விதிவத்தாகச் சிரோவிரதத்தை யனுஷ்டித்தாரென்று சிரோவிரத நியமம் வேதவிரதமாக விதிக்கப்பட்டதோ, இது வேதாங்கமல்ல. இந்த விரதத்தை முடிக்காதவன் படிக்கக்கூடாதென்று இந்த விரதத்திற்கு வேத சம்பந்தம் சொல்லப்பட்டமையாலும், ஸமாசார கிரந்தத்தில் இதுவும் வேதவிரதத்தாற்றுனே விரிக்கப்பட்டது என்று வேதவிரதமாகச் சிரோவிரதம் சொல்லப்பட்டதாகையாலும் பிரம்மவித்தை என்றவிடத்துப் பிரம்மம் என்ற சொல்லுக்கு வேதமெனப் பொருளாகையால் எங்ஙனம் ஸவ ஓமங்கள் அவர்களுக்கே யுளவோ அங்ஙனமே சிரோவிரதமுமாம். ஆகவே, இதனால் வித்தைகள் வேறுபடா என்று ஸ்பஷ்டமாய்ச் சிரோவிரதம் வேதவிரதமே என்றார். இதனால் இவர் எடுத்துத் தாண்டவமாடிய காளிகாகண்டம், அன்று எமது அம்பலவாணனுக்கு எதிரே தாண்டவம் புரிந்த அம்மையார் தாண்டவம்போலானதைக்காண்க. அதன்மேல் சுவேதாசுவதரர் எனப் பெயரிய மகா பாசுபதோத்தமர் சுசில ராசாவுக்குப் பாசுபததீக்ஷை உபதேசித்ததாகச் சொல்லும் கூர்மபுராண பூர்வபாகத்துப் பதினான்காம் அத்தியாயத்தினாலும் லிங்கபுராணம் பூர்வபாகம் எண்பது எண்பத்தாறு முதலிய அத்தியாயங்களாலும் இராமமூர்த்திக்குத் தண்டகாரணியத்திலே அகஸ்தியமாமுனிவர் பாசுபததீக்ஷை செய்தார் என்று விரித்துரைக்கும் பாதமபுராண சிவகீதையினாலும் அப்பாசுபத விரதம் அத்தியாசிரம முதலிய பெயர் படைக்குமென்றார்.

இவற்றைச் சிறிது கவனிப்பாம். சுவேதாசுவதரர் மகா யோகி அவர்முகமாக வெளிவந்த உபநிடதத்தில் அத்தியாசிரமிகளுக்கு உபதேசித்தார் என்று காண்டலால் 'அத்தியாசிரமத்தை அவர் மற்றவருக்கு உபதேசித்தது நியாயமே யானாலும் அவர் உபதேசித்த அத்தியாசிரம வேதோக்த விதி

யால் பஸ்மதாரணஞ் செய்ததன்றி வேறு ஔத்திரி முதலியன வன்றென்பதுதிண்ணம். சூதசங்கிதை யக்ஞவைபவகாண்டம் முப்பதாமத்தியாயத்தில்

ஶ்வேதாஶ்வதரஶாகீயா முநயோ வதந்தி ||

ஸ ய இமம் அத்யாஶ்ரமதர்மம் ஸம்யகாசரேத்|
தஸ்யைவ ஶிவம் ஸம்ஸாரமோசககாரணம் ||

"சுவேதாசுவதர சாகிகளான முனிவர்கள் சொல்லுகிறதாவது:--எவர் இந்த அத்தியாசிரம தருமத்தை நன்கு கொண்டு ஆசரிப்பார், அவர்க்கே சம்சாரம்நசிப்பதற்கேதுவான சிவஞானம் பிறக்கும்''

என்றும்,

உத்தூளநம் த்ரிபுண்ட்ரம் ஜ்ஞாநாங்கமிதி வேதநாத் ||

''உத்தூளனமும் திரிபுண்டரமும் ஞானங்கமாம்'' என்று அதன் சொரூபம் சொல்லப்பட்டமையாலும்

பிரமகீதையில்

அத்யாஶ்ரமிப்யோ ஹ்யேதத் வக்தவ்யம் ப்ரஹ்மவேதநம் ||

''அத்தியாசிரமிகளான சாந்தர்களுக்கே இந்தப்பிரமஞானம் உபதேசிக்கற்பாலது''

என்று சுவேதாசுவதரமந்திரோபநிஷத்தை விரித்துக்கூறி இறுதியில் அத்தியாசிரமபதார்த்தத்தை

அக்நிரித்யாதிபிர்மந்த்ரை: பஸ்மோத்தூளநம் ததா | த்ரிபுண்ட்ரதாரணம் சாபி விவேகஜ்ஞா அத்யாஶ்ரமம் விது: ||

''அக்கினியாதிமந்திரங்களால் பஸ்மோத்தூளனம் செய்வதும் திரிபுண்டரதாரணமுமே அத்தியாசிரமம் என விவேகிகள் சொல்வார்.''

என்று பதினோராம் அத்தியாயம் விளக்கியது. அதன்வியாக்கியானத்தில் வித்தியாரண்ணிய சுவாமிகளும்

அத்யாஶ்ரமிப்ய இதி ஸர்வேஷ்வாஶ்ரமேஷ்வதிஶயேந அத்யாஶ்ரமிண: ஸந்யாஸிந இதி கேசிதாஹு: தத்ரோக்தமிதி ||

என்று அத்தியாசிரமிகள் சந்நியாசிகளென்றும் அவர்களுக்கு அத்தியாசிரமம் எனப்படுவது உத்தூளனதிரிபுண்டரமேயென்றும் நிரூபித்திருக்கின்றனர். ஆதலாற்றான் பிரமவித்தியா பத்திராதிபரும் கைவல்யோபநிஷத் பாஷியத்தில் இதே பொருளை இதே வசனத்தைக்கொண்டு அத்தியாசிரம சொற்கு உரைசெய்தனரென்றறிக. மேல்கண்ட காரணங்களாலும் சிவபுராணம் வாயுசங்கிதை பூர்வபாகம் நான்காம் அத்தியாயத்தில் முறையே சுவேதாசுவதரஉபநிடதத்தைஉபபிருங்கணம் செய்து வருகையில்

அத்யாஶ்ரமோசிதம் ஜ்ஞாநம் பவித்ரம் பாபநாஶநம் ||

''அத்தியாசிரமத்திற்கு யோக்கியமான ஞானம் பரமபவித்திரம் பாவங்களைப் போக்கும்.''

என்று அத்தியாய சிரம பதம் நான்காம் ஆசிரமத்தையே குறித்தமையால் வைதிக பாசுபதமாகிய உத்தூளன திரிபுண்டரங்களே சுசீலராஜாவுக்கு உபதேசிக்கப்பட்ட தீக்ஷையென்க. இதனால் அவைதிக காமிகாதியாகம தீட்சை கொண்டொழுகும் இவ்வாதிக்கு ஏதும் இலாபம் இன்றென்க. அதேகூர்மத்தில் இவ்வாகமங்களைப் பலவாறாகத் தூஷித்த வசனங்கள் பலவுளவென அப்பய்யதீக்ஷிதர் சிவதத்துவவிவேகத்தில்

யதுக்தம் ந்யாயாதிகம் ||

என்ற சுலோக உரையில் நீட்டியிருக்க, அதே புராணம் பூர்வோத்தர விருத்தமாய் அவைதிக ஆகமதீக்ஷை சொல்லுமா? அப்படி அவைதிக ஆகமசம்பந்த தீட்சாபரமான சொல் அங்கு ஏதேனு முளதேல் அது முற்கூறியவாறு ஆகமானுவாதம் என்றொதுக்கவேண்டுமென்க. இவ்விடத்தில் எவ்வித வசனத்தையும் பூர்வபக்ஷியார் எடுக்கவில்லை யாகலின் அதை யிவ்வளவோடு நிறுத்தினமென்க. இங்ஙனமே இலிங்கபுராணமும் சிவகீதையும் ஸ்பஷ்டமாய் வைதிக விரஜாதீட்சை சொல்லியன. அஃதுசிதமே. சந்நியாசிகளுக்குச் சந்நியாச பூர்வாங்கமாக விரஜாஹோமம் பலவிடங்களில் விதிக்கப்படுதலால் அது அத்தியாச்சிரமங்களுக்குச் சிறந்ததென்றது மிகு பொருத்தமுடையதே. இதனாலும் ஆகமவாதியாகிய இவர்க்குக் கிடைத்த லாபஞ் சிறிதுமின்று; வைதிகர்க்கு வந்தநஷ்டமுஞ் சிறிதுமின்று. சிவகீதை மூன்றும் அத்தியாயத்தில் அகஸ்தியமுனிவர் இராமருக்கு உபதேசிக்கும் விதி காணப்படுகின்றது. அது முற்றிலும்

ஔபாஸநாக்நிமாதாய ஶோதயித்வா ப்ருதக் ப்ருதக் ||

''ஆவஸத்யாக்கினியைத் தியானித்துச் சோதித்து வேறாக''

என்றும்,

க்ருஹ்யோக்தமார்கேண ||

''தனது சாகையிற் கூறியவாறு அக்கினியைவைத்து''

என்றும்,

பிரயோகம் விதிக்கின்றமையின் ஸ்மார்த்தாக்கினி எனப்படும் ஆவஸத்திய ஔபாசனுக்கினியில் அவனவன் சாகைக்கேற்ற கிர்க்யத்தில்சொல்லப்பட்டப்டி விரஜாஓமந்தைச் சொல்வதேயன்றிச் சிரௌத ஸ்மார்த்தாக்கினிக ளாகாத சிவாகம விதிப்படி யமைந்த சிவாக்கினியில் நடக்கும் தீட்சைக்கும் அதற்கும் சம்பந்தம் சிறிதுமில்லை. இனி இவர் சிவபுராணவிசாரத்தில் அகப்பட்டுழல்வதைக் கவனிப்பாம். இவர் சிவபுராணம் வாயுசங்கிதை என்றெடுத்து

‘‘வ்ரதம்பாஶுபதம் ஶ்ரௌதம் அதர்வஶிரஸி ஶ்ருதம் ||

வ்ரதமேதத்ஸமாஸ்தாய நைஷ்டிகஸ் ஸ்ம்ருதஃ ||

ஸோத்யாஶ்ரமீச விஜ்ஞேயஃ மஹாபாஶுபதஸ்ததா ||’’

‘‘வைதிக பாசுபதவிரதம் அதர்வசிரசிலே சொல்லப்பட்டதாமெனவும், இவ்விரதத்தை அநுஷ்டிப்பவன் நைஷ்டிகன் எனக் கொள்ளப்படுவான் எனவும் அவன்பின்னரும் அத்தியாசிரமி என்றும் மகாபாசுபதன் என்றுஞ் சொல்லப்படுவான் எனவுங்கூறிற்று. பதும புராண சிவகீதையும் அவ்வாறு பாசுபத விரதத்தை விதந்தெடுத்துரைத்தது.

இவ்விரதம் தேகம் வீழுங் காலவரையிலேனும் பன்னிரு வருஷமேனும் ஆறுவருஷமேனும் மூன்றுவருஷமேனும் பன்னிருமாசமேனும் ஆறுமாசமேனும் மூன்றுமாசமேனும் ஒரு மாசமேனும் பன்னிருதினமேனும்ஆறுதினமேனும் மூன்றுதினமேனும் ஒருதினமேனும் விதிப்படி விரஜா ஹோமஞ்செய்து அவ்விரஜாபஸ்ம சாயியாயேனும் திருணசாயியாயேனும் ஆசிர (வற்கலை) சாயியாயேனும் அசின (மான்றோல்) சாயியாயேனுமிருந்து அக்கினியாதி மந்திரங்கொண்டு பாதாதிகேசாந்தமாகத் தரிக்கப்படும் பாசுப்தவிரஜா தீக்ஷாவிபூதியே சர்வாங்கோத்தூளனம் என்று சொல்லப்பட்டதாம் என்பது சிவபுராண வாயு சங்கிதை பூர்வபாகத்து இருபத்தொன்பதாம் அத்தியாயத்தினுல் அறியப்படுகின்றது. மிகலேசானே வெறியவிபூதியையெடுத்து அக்கினியாதி மந்திரங்கொண்டு சரீரமெங்கும் உத்தூளன திரிபுண்டரஞ்செய்து விடுதல் பாசுபதவிரதமெனக் கொள்ளப்படாதென்றும் ஸ்காந்தபுராண காளிகாகண்டம் கைலாய சங்கிதை வாயுசங்கிதை சனற்குமாரசங்கிதை முதலியனகூறியவாறு ஆகமங்களிலே மந்திரசமஸ்காரதீக்ஷை எனப்படும் பாசுபதவிரஜாதீக்ஷையை விதிப்படி அநுஷ்டித்து அக்கினியாதி மந்திரங்கொண்டு பாதாதிகேசாந்தம் உத்தூளன திரிபுண்டரமாகத்தரிக்கப்படும் பராசத்திஸ்வரூப மகாவிபூதியே பாசம்போக்க வல்ல வீரியமுடைய மகாபாசுபத சாம்பவவிரதமெனக் கொள்ளப்படுமா மென்றும் உணரற்பாற்றும். இவ்வனுஷ்டானம் பல பிராமணரால் விரஜாதீக்ஷாபத்ததிப்படி தற்காலத்தில் அநுஷ்டிக்கப்பட்டுவருவதில் பார்த்தறிந்து கொள்ளலாகும். இவ்வைதிக பாசுபத விரதம் விஷ்ணு பிரமா மார்க்கண்டேயர் ததீசி தூருவாசர் கௌதமர் ஜாபாலர் அதர்வணர் காத்தியாயனர் அகஸ்தியர் கணபதி ஸ்கந்தர் பிருங்கி உபமன்னியு கிருஷ்ணன் முதலிய பெரியோர் அனைவராலும் அனுஷ்டிக்கப்பட்ட தொன்றும்.’’

என்று கூறினர்.

இவ்விஷயத்தை விரிவாய் விசாரிப்பாம். இவரெடுத்துக்காட்டிய வசனம் வாயுசங்கிதை உகூ-வது அத்தியாயத்திலுள்ளது. அது அதன் பூர்வ அத்தியாயமான உஅ-வது அத்தியாயத்தில் இருபகுதியாகக் குறிக்கப்பட்ட வைதிக அவைதிக சிவாசமங்களில் வைதிகமென்ற பகுதியையே குறித்ததாதலின், அது இவ்வாதிக்கு எதும் சாதகமின்றும். முன்னொருசமயம் இவ்விஷயத்தில் ம-ா-ா-ஸ்ரீ சாமக்குளம் வெங்கடரமணதாஸரென்னும் நவீனசைவரொருவர் தலையிட்டு இடர்ப்பட்டு முறிந்த கதையை இவ்வையர் கண்டிலர்போலும். இவர் அறியுமாறு அதே விஷயத்தை மீண்டும் எடுத்து உபந்நியசித்து வாயுசம்மிதையும் சூத சம்மிதையும் இவர்க்குச் சிறிதும் சம்பந்தமற்ற நூல்களெனவும் அவற்றினுள் பிரகிருதத்திலுள்ள வாயுசங்கிதை வேதவைதிக சித்தாந்த பரமானுகூலமெனவும் அவைதிகாகமிகளுக்கு அது முற்றும் விரோதமெனவும் விளக்குவாம்.

பிரமவித்தை 8-ம் புத்தகம் 17-ம் இலக்கப்பத்திரிகையில் இவ்விஷயம் மிக விரிவாய் வந்திருக்கின்றது. ஆண்டுக் கண்டு கொள்க.

இங்ஙனமிருக்க சுத்தவைதிக மார்க்கத்தைக் குறிக்கும் வாயுசங்கிதையில் ஏதோ பூர்வபாகம் இருபத்தொன்பதாம் அத்தியாயம் இவருக்குச் சகாயமாக ஒரு சுலோகத்தை வைத்திருப்பதாக எடுத்த விந்தையை ஏதெனக்குறிப்போம்! அந்தோ முன்னொருவாதி சூதசங்கிதையிற் றலையிட்டுச் சுலோமொன்றனையெடுத்து அது அத்துவிதத்தைத் தூஷிப்பதாகக்காட்டி அதனால் அச்சூதசங்கிதை ஆறுயிரம் சுலோசமும் அவ்வித பொருளுனரத்ததாகக்கூறி விவாதசபையில் அவமதிப்படைந்ததற்கு நிகராக இன்று இவ்வையர் தோன்றினர். இது கலியின் அவைக்களமகிமையின் கூறேயாமென்க. இவர்கொண்ட சித்தாந்த நூலாகிய காமிகாதிகளை வாயுசங்கிதை நேரில் அவைதிகமென்றெடுத்து வைதிகாகமங்கள் வேறு என ஸ்பஷ்டமாய்க் கூறியிருக்க அதனையே தமக்குப் பிரமாணமெனக்காட்ட எழுந்தது விந்தையினும்விந்தையே! வைதிகர் ஆக்னேயாஸ்திரம் விட்டால் அதற்குப் பிரதிஅஸ்திரம் பிரயோகிக்கக் கருதி ஆகருஷ்ணாஸ்திரத்தைப் பிரயோகித்து; தமக்கே கேடுவருவித்தவர்க் கொப்பானரிவ் வையர்.

நிற்க, யாம் மேலே காட்டிய வசனம் வைதிக பாசுபதரே நைஷ்டிகரென்றும் மோட்சத்திற் குரியரென்றும் நன்கு விளக்க, அதே வசனத்தை மயங்கிச் சூனியவாதிகளாகிய பாசுபதர்க்குச் சேர்த்தது மிகுந்ததோர் விந்தையா மென்க. சுவேதராதி

லகுளீச ரீருயுள்ள ஆரியர்களை ஸ்பஷ்டமாக அப்பய்யதீக்ஷிதர் சிவார்க்கமணி தீபிகையில் 'மகாபாசுபதர்' எனக் குறித்தெடுத்திருக்க அவர் சித்தாந்தங் கெடுமாறு இவர் கூறுஞ் சித்தாந்தம் எங்ஙனம் மணம்பெறும்? ஆகமங்கள் விரஜாதீக்ஷையைப்பற்றியும் அக்கினிஹோத்திர பஸ்மத்தைப்பற்றியும் சிறிதுஞ் சொல்லவில்லை. ஏதோ வேதங்கட்கு விருத்தமான கற்பானுகற்ப முதலிய பேதங்களை நிரூபிப்பனவென 'கலிகண்டகோத்தாரம் குருசரண பூஷணங்'களில் ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள் நிரூபித்துள்ளதை அந்நூல் 75-ம் பக்கமுதற் காண்க. இத்தகைய அவைதிகமும் புராண நிந்திதமுமான தாந்திரிகதீக்ஷையை மேற்கண்ட அத்தியாசிரமாதி பதங்களுக்குப் பொருளென உரைத்தது மயக்க அறிவன்றி வேறென்னும்? புராணங்கள் அவைதிகாகமங்களைத் தூஷித்தொதிக்கியிருத்தலையும் அவ்வாகமங்கள் புராணங்களைத் துதித்திருத்தலையும் கண்டபிறகாவது நமதையர் இவ்வீண்விதண்டாவாதத்தில் புகாதிருப்பரோ யாதோ அறியோம். புராணங்கள்செய்த தாந்திரிக நிந்தைகள் அநந்தமாக அவற்றுள் இவர் தமக்கிதமென நம்பிய ஸ்காந்தபுராணத்திலிருந்து வேண்டிய வளவு காட்டுவோம். அதில் இவர் சித்தாந்த விரோதமும் தந்திர நிந்தையும் காண்பாராக.

ஆகமங்களிலொன்ருன அம்சுமதியில்,

யஜ்ஞஸங்கீர்த்தநஞ்சைவ புராண ச்ரவணம் ததஃ ‖

நித்யாசாரஸமாக்யாதஃ யாவஜ்ஜீவம் ஸமாசரேத் ‖

"தர்ம சங்கீர்த்தனமும் புராண சிரவணமும் நித்தியாசாரமாம். அவற்றை அவசியம் செய்யவேண்டும்."

என்றிருக்கின்றமை காண்க.

சூதசங்கிதை கூர்மாதி புராணங்கள் தந்திரங்களைப் பொதுவாய் வேதத்திற்குக் கீழ்ப்படுத்தியும் வைதிகர்களுக்கு அதில் அதிகாரம் இல்லையென்றும் அது அனதிகாரிகளுக்கு அருகமென்றும் சிவாகமங்கள் வைதிகத்திற்கு நிகராகாவென்றும் அன்றி அவை கீழ்ப்பட்டனவென்றும் அவை மற்றத் தந்திரங்களுக்கு மேற்பட்டன வாயினும் ஸ்மார்த்தத்திற்கு கீழ்ப்பட்டன வென்றும் சொல்லும் பிரமாணங்களை யெடுத்துக்காட்டுவோம்.

தந்திர சாமானிய நிந்தை வருமாறு:—

சூதசங்கிதை 8-ம் அத்தியாயம்.

ச்ருதிமார்க்கச்யுதாநாம் மாநுஷாணாம் க்ருதம் ப்ரமாணாவிபேசஸ்ஸர்வஜ்ஞோ விஷ்ணுஸ்ஸம்ஸ்த்ருதஃ ‖

ச்ருதிநிஷ்டாநாம் தத்ர நைவாஸ்திகிஞ்சிதிஷ்டாம்ஸமந்த்ரம் ஸுக்ஷ்மம் ஸத்யோக்தம் | ச்ருதிவிஞ்ஞாநாம்வர்ணாச்ரமம் மஹாதேவஸ்ஸர்வ ஸர்வவித்ப்ராஹ தந்த்ரேஷு தத்வதஃ ‖

ச்ருதிமார்க்கச்யுதாநாம் வர்ணாச்ரமம் ஸூர்யோ ஸ்வஸ்தாநாம் ப்ரோக்தம் ஸ்ருதிபோதாநுஷ்டேய ‖

ஸ்ருதிமார்க்கச்யுதாநாம் ப்ராஹ ஸர்வக்ஞோ ஹரிவர்ணாச்ரமம் தர்மம் ப்ராஹ தந்த்ரே ப்ரயத்நதஃ ஸ்திதயே ‖

ச்ருதிநிஷ்டாநாம் தைவம் ஸர்வதீயாஃ ச்ருதிஸம்ஸ்காரமார்க்கே நைவ ஸம்ஸ்த்யோக்தம் ‖

"வேதமார்க்கப்பரிப்பிரஷ்டராகிய மனிதர்களிடம் கருணையால் பரமகுருவாகிய ஈசுவரன் ஸர்வஞ்ஞன் சம்புதந்திரங்களையுபதேசித்தான்; வேதமார்க்கத்தை யவலம்பித்தவர்களுக்கு அதில் கொள்ளப்படுவது சிறிதுமில்லை. வைதிகர்கட்கு இதமான எல்லா விஷயமும் பரிபூரணமாக இங்குச் சொல்லப்பட்டன."

"வேதங்கள் மனிதர்களுக்கு எவ்வாறு வருணாசிரமங்களையுபதேசித்தற் குரியனவோ அவ்வாறே வேதமார்க்கப் பிரஷ்டர்களை யுத்தேசித்துக் கருணைக்கடலும் சர்வகுருவுமாகிய சங்கரனும் தந்திரங்களில் வருணாசிரம தருமங்களைச் சொன்னார். அது வேதமார்க்கத்தில் நிஷ்டைபெற்ற வைதிகர்களுக்கு முற்றும் அநுஷ்டித்தல் கூடாது"

என்றும்,

சிவப்புரோக்தம் எனப்படும் சிவாகமங்களாகிய காமிகாதிகளைக்கூறி, பின்னர்ச் சிவாகமங்கள் அங்ஙனமானால் பாஞ்சராத்திர முதலிய வைஷ்ணவ தந்திரங்கள் எவ்வாறென வினா நிகழ,

"வேதப் பிரஷ்டர்களை யுத்தேசித்து ஹரியும் தனது பாஞ்சராத்திரதந்திரத்தின் தந்திரப்பிரதான தருமங்களைச்சொன்னார்'

என்று காட்டித் துணிவுரை கூறுமிடத்து,

"வைதிகர்களால் சிறிதும் வேண்டப்படாதன வாகலின் வேதயார்க்கத்துச் சமானமார்க்கம் வேறில்லையெனச் சத்தியமாய்ச் சொன்னேன்."

என்றும்,

அதே அத்தியாயத்தின் இறுதியில்

மஹாதேவஸமோதேவோ யதா நாஸ்தி ச்ருதௌ ஸ்ம்ருதௌ ‖

ததாவைதிகதந்த்ரஜ்ஞஸமோ நாஸ்தி ந ஸம்சயஃ த்ராவகம் விஷ்ணோ ‖

"எங்ஙனம் தேவதைகளுக்குள் மகாதேவனுக்குச் சமானமானவன் இல்லையோ அங்ஙனமே தந்திர நிஷ்டர்களில் வைதிகருக்கு நிகரில்லை."

என்று தொடங்கி,

ஆறு சுலோகங்களால் தாந்திரீகத்தினும் வைதிகம் மிக மேலெனக் காட்டிப் பின்னர்,

ஆதித்யேந விஹீநம் து ஜகதேதத்யதாந்தகம்
ததா வைதிகஹீநம் து ஜகதந்தம் ந ஸம்ஶய꞉ ॥

ப்ராணேந்த்ரியாதிஹீநம் து ஶரீரம் குணபோ யதா ॥

ததா வைதிகஹீநம் து ஜகத்வ்யர்த்தம் ந ஸம்ஶய꞉ ॥

"ஆதித்தனில்லா உலகம் எங்ஙனம் பொட்டை (குருடு) யாமோ அங்ஙனமே வைதிகனில்லா உலகம் பொட்டையாம், பிராணேந்திரியங்க ளில்லாவிடில் சரீரம் எவ்வாறு பிணமோ அவ்வாறே வைகனில்லா உலகம் வியர்த்தமாம்"

என்று தாந்திரீகரைப் பலவாறு இகழ்ந்தும் வைதிகரைப் புகழ்ந்து மிருப்பது மன்றி,

தாந்த்ரிகாணாம் ஶரீரே து தேவதா꞉ ஸகலா அபி
ஸந்தி ந தாஸாம் தேஷு ப்ரகாஶ꞉ தத்தேவதாஶுத்த்யபாவத꞉ ॥

"தாந்திரிகர் சரீரத்தில் எல்லாத் தேவதைகளு மிருந்தாலும் சுத்தக் குறைவால் பிரகாசிப்ப தில்லை"

என வைதிகன் சரீரத்தைப் புகழ்ந்தும், தார்திரிகன் சரீரத்தை யிகழ்ந்தும் கூறி, தந்திரவாசனை என்றும் பந்த ஏது என்பதற்குப் பிரமாணமாக

வேதபாஹ்யேஷு தந்த்ரேஷு நராணாம் வாஸநா இவ ॥

"வேதபாஹிய தந்திரவாசனை மனிதர்களுக் குண்டானால் (அதுவும் பந்த ஏது)"

என்றும்

வேதபாஹ்யேஷு மார்கேஷு ஸம்ஸக்தா யே நராதமா꞉ ॥

தே ஹி பாஷண்டிந꞉ ஸாக்ஷாத் ததா தை꞉ ஸஹவாஸிந꞉ ॥

"எவர் வேதங்களுக்குப் புறம்பான தந்திரங்களில் தீட்சை பெற்றவர், அவர் சாக்ஷாத் பாஷண்டிகள், அவர்களுடனே சகவாசம் செய்பவரும் அங்ஙனமே"

என்றும்,

வேதநிஷ்டோ ஹி தாந் ஸர்வமார்காந் அஶுத்தாந் நைவ ஸம்ஸ்ப்ருஶேத் ॥

"வேதநிஷ்டை யுள்ளவன் அசுத்தமார்க்கங்களானவைகளை என்றுந் தொடக்கூடாது"

என்றும்,

பௌத்தம் பார்ஹஸ்பத்யம் சைவ ததா பாஶுபதம் ததா
ஶைவம் ச ஶாம்பவம் தீக்ஷிதா யே ஸ்யுர் ப்ராஹ்மணாதமா꞉ । பாஷண்டேஷு ததாந்யேஷு மார்கேஷு ப்ரவிஶந்தி ச ॥

"பௌத்தம் பாசர்ஹஸ்பதம் (சார்வாகம்) அங்ஙனமே; பாசுபதம் சாம்பவம் இவற்றுள் தீட்சைபெற்றுப் பிராமண அதமராவீர்கள்; அவைதிக பாஷண்ட மார்க்கங்களிலும் பிரவேசிப்பீர்கள்"

என்றும்,

காமிகாதி ப்ரபேதேந ஸம்ஹிதா நைகதா ஸ்திதா꞉ ॥

ஶைவாகமோக்த தர்மேப்ய꞉ ஸ்மார்த்ததர்மா விஶிஷ்டதா꞉ ॥

"காமிகாதி பலவேற்றுமையுள்ளன சிவாகமம்"

என்றுங் காட்டி, அவற்றிலும்

"சிவாகமங்களிற் சொல்லப்பட்ட தருமங்களிலும் ஸ்மார்த்த தருமம் மேலானது"

என்றும்,

வாமபாஶுபதாதீநாம் ஶைவாநாம் பரிக்ரஹ꞉ ॥

ஸம்ஸாரத்ஶ்ரேயோ ஜ்ஞாநாநுத்பத்திகாரணம் ॥

"வாமம் பாசுபதம் முதலிய அவைதிக ஆகம பரிச்யமும் ஞானம் பிறவாததற்கு ஏது"

என்றும்,

தாந்த்ரிகாணாமஹம் தேவி ந ஹ்யேவாவ்யயா நத꞉ ॥

"தாந்திரிகர்களுக்கு ஸ்ரீதேவி! நான்கிட்டேன், தூரத்துள்ளேன்"

என்றும்

கூறும் நூற்றுக் கணக்கான வசனங்க ளுளவேனும் இவ்வாறு தந்திரசாமானியத்தையும் விசேஷித்து அவைதிக பாசுபதத்தையும் புறக்கணித்த இச்சூதசங்கிதையும் வாயுசங்கிதையும் ஆகமத்தைத் தழுவி, அதிற்கண்ட தீக்ஷையுடன் திரிபுண்டரத்தையும் விதித்ததெனப் பொருளுரைக்கத் துணிந்த இவ்வையரை வியந்துகொண்டாடாதவர் ஒருவருமிரார்!

கலௌ ஜகத்பதிம் ஶம்பும் ஸத்யாதிலக்ஷணம் । நார்ச்சயிஷ்யந்தி வேதேந பாஷண்டோபஹதா ஜநா꞉ ॥

வேதோக்தேநைவ மார்கேண ஸ்நாநேநைவ த்ரிபுண்ட்ரகம் । உத்தூளநம் ந கரிஷ்யந்தி பாஷண்டோபஹதா ஜநா꞉ ॥

த்ரிபுண்ட்ரோத்தூளநாசாரோ ராஜாபாஷண்டோக்தேந வர்த்தநா ॥

தேவதேவஸ்ய விப்ரேந்த்ர ஸ்வாஹாவிஷ்டிகரம் ஸதா ॥

"கலிகாலத்தில் உலககாரணனும் சத்தியாதி சொரூபனுமான ஈசனை வேதமார்க்கங்கொண்டு (பாஷாணம்) ஆராதனை செய்யார்; அங்ஙனம் வேதங்களிற் சொல்லப்பட்ட வழியையே கொண்டு திரிபுண்டர உத்தூளனங்களைச் செய்து கொள்ளார் பாஷண்டிகள்"